# வெற்றிடங்கள்

## தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழு
## (2016 இல.12 தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது)

### பணிப்பாளர் நாயகம்/ பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி

தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம்/ பிரதம நிறைவேற்று அதிகாரி பதவிக்காக கீழ்க்காணும் தகைமைகள் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பதவி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் இல. 02/2016 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**தகைமைகள்**

(அ) விஞ்ஞானம்/விவசாயம்/சட்டம்/வர்த்தக நிர்வாகம் அல்லது வேறு குறித்த பாடத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

சமூகக்கல்வி/ஊடகம்/சட்டம்/வர்த்தக நிர்வாகம் அல்லது வேறு குறித்த பாடத்துறையில் பட்டப்பின் படிப்பைப் பெற்றிருத்தல் அல்லது முகாமைத்துவம் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் கிட்டிய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டத் தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை அல்லது அங்கிகரிக்கப்பட்ட தனியார் துறையின் நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்திலான பதவிகளில் குறைந்த பட்சம் 15 வருட அனுபவம்

அல்லது

(ஆ) பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறைக்குப் பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் பதினைந்து வருட (15) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**வயது :** 35 வயதிற்குக் குறையாத மற்றும் 55 இற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு :** HM 1-1 ரூபா 80,295-15x2270-114,345

விண்ணப்பதாரிகள், தம்மைப் பற்றிய தகவல்களை விசாரிக்கக் கூடிய பொறுப்புக் கூறும் நபர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரிகளுடன் தமது கல்வி மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய விபரமான தகவல்கள் (CV) களை 2025.02.10ம் திகதி அல்லது அதற்கு முன்பு கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

தலைவர், தகவலறியும் உரிமை பற்றிய ஆணைக்குழு, அறை இல 203-204, கட்டிட இல.02, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகம், கொழும்பு - 07 அல்லது **மின்னஞ்சல் முகவரி :** info@rtic.gov.lk

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு கோரப்படுகின்றனர்.